## பாடம் - 7. திருக்குறள் கதைகள்

**வகுப்பு: IV**

**பாடம்: தமிழ்**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'பொறை ' என்பதன் பொருள் .....................................

அ) முழுமை ஆ) வளமை **இ) பொறுமை** ஈ) பெருமை

2. நிறையுடைமை – இச்சொல்லை ப் பிரித்து எழுதக் கிடைப்பது .................

அ) நிறை + யுடைமை **ஆ) நிறை + உடைமை**

இ) நிறைய + உடைமை ஈ) நிறையும் + உடைமை

3. 'மெய் + பொருள்' – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..............

அ) மெய் பொருள் ஆ) மெய்யானபொருள்

**இ) மெய்ப்பொருள்** ஈ) மெய்யாய்ப்பொருள்

4.வெகுளாமை – இச்சொல்லின் பொருள்..............................................

அ) அன்பு இல்லாமை ஆ) பொறாமை கொள்ளாமை

**இ) சினம் கொள்ளாமை** ஈ) பொறுமை இல்லாமை

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க

**1. பொறையுடைமை எப்போது போற்றப்படும்?**

நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும். அப்போது பொறையுடைமை போற்றப்படும்.

**2. மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?**

எப்பொருளையார் யாரிடம் கேட்டாலும் கேட்டவாறே, எடுத்துக் கொள்ளாமல் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறுகிறார்.

**3. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?**

நாவைக் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

**4. சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?**

ஒருவன் தன்னைத்தானே காக்க விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்.அவ்வாறு காத்துக் கொள்ளாவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.

**5. நீங்கள் படித்த திருக்குறள் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?**

எனக்குப் பிடித்த கதை 'பொறுமையும் பொறுப்பும்'.

இக்கதை மூலம் பொறுமையின் சிறப்பை உணர முடிகிறது. எடிசன் தன் பணியாளரிடம் பொறுமையாக செயல்பட்டு, பணியாளருக்குப் பொறுப்பாக

இருப்பதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார். அதனால் இக்கதை எனக்குப் பிடிக்கும்.

## இ. பொருத்துக

1. பொறை - பொறுமை
2. மெய்ப்பொருள் - உண்மைப்பொருள்
3. காவாக்கால் - காக்காவிட்டால்
4. சோகாப்பர் - துன்பப்படுவர்
5. சொல்லிழுக்கு - சொல்குற்றம்

## ஈ. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக

1. ஆய்வகம் **மேல் தளத்தில்** இருந்தது. (மேல் தளத்தில்/ மேல் தலத்தில்)
2. வழியில் **குறுக்குப்பாதை** ஒன்று வந்தது. (குருக்குப்பாதை/ குறுக்குப்பாதை)
3. உனக்குக் காரணம் **புரியவில்லையா** (புறியவில்லையா/ புரியவில்லையா)
4. எடிசன் மின் **விளக்கு** உருவாக்கினார். (விளக்கு/ விலக்கு)
5. குற்றம் **குறை** யாரிடம் இல்லை (குரை/ குறை)

## உ. மொழியோடு விளையாடு. பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து வினாத் தொடரை முழுமையாக்குக.

1. உன்னுடைய ஊரின் பெயர் **என்ன**?
2. உனக்குப் பிடித்த வண்ணம் **எது**?
3. நீ பள்ளிக்கு **எப்படி** வருகிறாய்?
4. உன்னுடைய நண்பன் **யார்?**
5. கோடை விடுமுறைக்கு **எங்கு** சென்றாய்?
6. மெய்ப்பொருள் என்பதன் பொருள் **யாது**?
7. குறில் எழுத்துகள் **யாவை**?
8. சாருமதி **யாருடைய** வீட்டிற்குச் சென்றாள்?

யாது
யாவை
எங்கு
எது
எப்படி
என்ன
யார்
யாருடைய

## ஊ. நமக்குத் தேவையான பண்புகளை த் தேர்ந்தெடுப்போமா?

1. அன்பு
2. அடக்கம்
3. ஒழுக்கம்
4. ஈகை
5. வாய்மை
6. செய்ந்நன்றி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ன் | பு | ம் | வ | க |
| ட | பொ | வு | ன | சை | ல் |
| க் | ஈ | றி | சி | பொ | லா |
| க | கை | அ | வா | ய் | மை |
| ம | க | க் | ழு | ஒ | ரு |
| செ | ய் | ந் | ந | ன் | றி |